**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 83/2018 Date:19.08.2025**

**(PW3)- SooryaKala**

<u>பிரதிவாதி தரப்பு விசாரணை</u>

**1.** நான் தற்போது இரணியல் சார்பதிவாளராக பணிபுரிகிறேன். நான் நீதிமன்ற அழைப்பாணை அடிப்படையில் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வாசாஆ. 1 ஆவணம் எனது அலுவலகத்தில் பதியப்பட்ட ஆவணமா என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எந்த தேதியில் யாரால் யாருக்கு அடமானம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஜூன் 18 , 2003 ல் அந்தோணி முத்து என்பவர் பெனான்சிஸ் பெலாமி என்பவருக்கு அடமானமாக எழுதி கொடுத்துள்ளார். மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து எந்த கிராமத்திற்கு உட்பட்டது , அதன் புல எண் என்ன என்றால் தலக்குளம் கிராமம் சர்வே எண் 450/8 ல் 10 சென்ட் விஸ்தீரணம் உள்ள சொத்து ஆகும் . மேற்படி சொத்தின் பழைய சர்வே எண் என்ன என்றால் சர்வே எண் 8710 ஆகும். மேற்படி சொத்தின் எல்கைகள் என்ன என்றால் குளத்திற்குமேற்கு ரோஸ்மேரி நிலத்திற்கு தெற்கு, கால்வாய்க்கு கிழக்கு மற்றும் வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**2.** வாசாஆ. 1 ஆவணத்தின் அடிப்படையில் தான் எனது அலுவலகத்தில் பதிவேடுகள் இருக்கும் என்றால் சரிதான். வாசாஆ. 1 ஆவணத்தின் அடிப்படையில் தான் அலுவலக பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ. 1 ஆவணத்தின் Filing sheet கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டு வந்துள்ளேன். அதில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் என்ன என்றால் சர்வே எண் 459/8 ஆகும். மேற்படி பிழை தட்டச்சு பிழையா என்றால் இருக்க வாய்ப்புண்டு. வாசாஆ. 1 ன் முன் ஆவணங்களில் சர்வே எண் 450/8 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**3.** என்னிடம் காட்டப்படும் வாசாஆ. 2 ஆவணம் எனது அலுவலகத்தில் பதியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எந்ததேதியில் யாரால் யாருக்கு அடமானம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் 06.11.2007 அன்று பெனான்சிஸ் பெலார்மின் ஜோசப் கென்றி என்பவருக்கு எழுதி கொடுத்த ஆவணமாகும். மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் என்ன என்றால்தலக்குள கிராமம், சர்வே எண்

450/8 , பழைய சர்வே எண் 8710 ஆகும். என்னிடம் காட்டப்படும் வாசாஆ. 1 ஆவணத்தில் எந்த வித அடித்தலும் திருத்தலுமில்லையென்றால் சரிதான். மேற்படி வாசாஆ. 1, 2 ஆவணங்கள் எனது அலுவலகத்தில் பதியப்பட்ட உண்மையான ஆவணம் என்றால் சரிதான்.

**1 முதல் 3 மற்றும் 5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை**

**1.** நான் கொண்டு வந்துள்ள Filing Sheet ல் வாசாஆ 1 ற்கான தமிழ்நாடு முத்திரை வரிசை எண் என்ன என்றால் அவ்வாறு எதுவும் குறிப்பிடவில்லை. நான் கொண்டு வந்துள்ள Filing Sheet ல் தமிழ்நாடு முத்திரை வரிசை எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 1694 என்று குறிபபிடப்பட்டுள்ளது, ஆனால் அது தான் தமிழ்நாடு முத்திரை வரிசை எண் என்று எனக்கு தெரியாது. தமிழ்நாடு அரசு வழங்கக்கூடிய ஒவ்வொரு பத்திரங்களிலும் தமிழ்நாடு முத்திரை வரிசை எண் இருக்கும் என்றால் சரிதான். ஆனால் Filing Sheet ல் தமிழ்நாடு வரிசை எண் என்று குறிப்பிடவில்லையென்றால் தமிழ்நாடு எண் என்று தான் பொதுவாக குறிப்பிடுவார்கள், அது குறிப்பிடப்பட்டுள்ளது.

**2.** வாசாஆ. 1 ஆவணத்தில் தமிழ்நாடு முத்திரை வரிசை எண் குறிப்பிடவில்லையென்றால் சரியல்ல, 1694 என்று குறிபபிடப்பட்டுள்ளது. வாசாஆ. 1 ஆவணம் எனது அலுவலகத்தில் Filing Sheet மற்றும் அசலுடன் ஒப்பிட்டு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு பதிவு செய்யும் சமயத்தில் ஏதாவது தவறுஇருப்பின் அது சரி செய்யப்படும் என்றால் சரிதான். வாசாஆ. 1 ஆவணத்தில் உள்ள சர்வே எண்ணும் Filing Sheet உள்ள சர்வே எண்ணும் ஒரே புல எண்ணா, வேறு புல எண்ணா என்றால் வேறு புல எண் ஆகும். புல எண் மாறும் பட்சத்தில் சொத்து விவரம் மாறி விடும் என்றால் சரிதான்.

**3.** நான் கொண்டு வந்துள்ள Filing Sheet தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றாலும் பொதுவாக ஒரு ஆவணம் எவ்வாறு தயாரிக்கப்படுகிறதோ அவ்வாறு தான் Filing Sheet லும் இருக்கும் என்றால் சரிதான். வாசாஆ. 1 ஆவணம் தட்டச்சு செய்யப்படவில்லையென்றால் சரிதான். வாசாஆ. 1 ஆவணமும் Filing Sheet ல் உள்ள ஆவணமும் முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ. 1 ஆவணத்தில் பத்திரத்தில் உள்ள பெயர் அடித்தல் திருத்தல் இருந்தால் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்வார்களா என்றால் பதிவு செய்வார்கள். வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் குறிப்பிடுவது போல் தமிழ்நாடு அரசு

முத்திரை வரிசை எண் இல்லையென்றால் சரியல்ல. நான் குறிப்பிடும் எண் பத்திர விற்பனையாளர் வரிசை எண் என்றாலும் அது தமிழ்நாடு அரசு முத்திரை வரிசை எண் இல்லையென்றால் சரியல்ல. வாசாஆ, 1 ஆவணம் போலியாக உருவாக்கப்பட்டது என்றாலும் அதனால் தான் தமிழ்நாடு அரசு முத்திரை வரிசை எண் இல்லையென்றால் சரியல்ல.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்